ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

திருவருட்பாத் திரட்டு.

[சுத்தப் பதிப்பு]

லாங்மேன்ஸ் க்ரீன் அண்ட் கம்பெனியார்
167, மவுண்ட் ரோட், சென்னை.
பம்பாய், கல்கத்தா.

1916.

Copy right registered.] [ரிஜிஸ்தர் செய்தது.

PRINTED BY
MESSRS. S. MURTHY AND CO., AT THE
"KAPALEE" PRESS, MADRAS.

ஓம்

பரமபதி துணை

திருவருட்பாத்திரட்டு

—o—

திருச்சிற்றம்பலம்

இன்றுவரு மோநாளைக் கேவருமோ வல்லதுமற்
றென்றுவரு மோவறியே னெங்கோவே—துன்றுமா
வெம்மாயை யற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா விருக்கும் சுகம்.

முதற்றிருமுறை

திருவடிப்புகழ்ச்சி

திருச்சிற்றம்பலம்.

பரசிவஞ் சின்மயம் பூரணஞ் சிவபோக
பாக்கியம் பரம நிதியம்
பரசுகந் தன்மயஞ் சச்சிதா நந்தமெய்ப்
பரமவே காந்த நிலையம்
பரஞா னம்பரம சத்துவம கத்துவம்
பரமகை வல்யநிமலம்
பரமதத் துவநிரதி சயநிட்க ளம்பூத
பௌதிகா தாரநிபுணம்
பவபந்த நிக்ரக விநோத சகளஞ்சிற்
பரம்பரா னந்தசொருபம்
பரிசயா தீதஞ்சு யஞ்சதோ தயம்வரம்
பரமார்த்த முக்தமௌனம்
படனவே தாந்தாந்த மாகமாந் தாந்தநிரு
பாதிகம் பரமசாந்தம்

பரநாத தத்துவாந் தஞ்சகச தரிசனம்
பகிரங்க மந்தரங்கம்
பரவியோ மம்பரம ஜோதிமயம் விபுலம்
பரம்பர மனந்த மசலம்
பரமலோ காதிக்க நித்தியசாம் பிராச்சியம்
பரபதம் பரமசூக்ஷ்மம்
பராபர மநாமய நிராதர மகோசரம்
பரமதந் திரம்விசித்திரம்
பராமுத நிராகரம் விகாசனம் விகோடனம்
பரசுகோ தயமக்ஷயம்
பரிபவ விமோசனங் குணரகிதம் விச்சுவம்
பதித்துவ பரோபரீணம்
பஞ்சகிர்த் தியசுத்த கர்த்தத்து வந்தற்ப
ரஞ்சிதம் பரவிலாசம்
பகர்சுபா வம்புனித மதுலமது லிதமம்ப
ராம்பர நிராலம் பனம்
பரவுசா க்ஷாத்கார நிரவய வங்கற்ப
னாதீத நிருவிகாரம்
பரதுரிய வநுபவங் குருதுரிய பதமம்ப
கம்பகா தீத விமலம்
பரமகரு ணாம்பரந் தற்பதங் கனசொற்
பதாதீத மின்ப வடிவம்
பரோக்ஷஞா னாதீத மபரோக்ஷ ஞானானு
பவவிலாசப் பிரகாசம்
பாவனா தீதஞ்ஞா னாதீத முபசாந்த
பதமகா மௌனரூபம்
பரமபோ தப்போத ரகிதசகி தஞ்சம்ப
வாதீத மப்பிரமேயம்

பகரனந் தானந்த மமலமூசி தஞ்சிற்ப
தஞ்சதா னந்த சாரம்
பரையாதி கிரணங்க சாங்கசௌ பாங்கவிம்
பாகார நிருவி கற்பம்
ரசுகா ரம்பம்ப ரம்பிரம வித்தம்ப
ரானந்த புரணபோகம்
பரிமிதா தீதம்ப ரோதயம் பரிகதம்
பரபரீ ணம்பராந்தம்
ரமார்ப்பு தம்பரம சேதனம் பசுபாச
பாவனம் பரமமோக்ஷம்
ரமாணு குணஙவா தீதஞ்சி தாகாச
பாஸ்கரம் பரம போகம்
பரிபாக வேதன வரோதயா னந்தபத
பாலனம் பரமயோகம்
பரமசாத் தியவதீ தானந்த போக்கியம்
பரிகதம் பரிவேத்தியம்
பரகேவ லாத்விதா னன்தானு பவசத்த
பாதாக்ர சுத்த பலிதம்
பரமசுத் தாத்விதா னந்தவனு பூதிகம்
பரிபூத சிற்குணந்தம்
பரமசித் தாந்தநிக மாந்தசம ரசசுத்த
பரமாணு பவவிலாசம் (௰)
தரமிகுஞ் சர்வசா திட்டான சத்தியஞ்
சர்வவா னந்த போகம்
சார்ந்தசர் வாதார சர்வமங் களசர்வ
சத்திதர மென்றளவிலாச்
சகுணநிற் குணமுறு சலட்சண விலட்சணத்
தன்மைபல வாககாடித்

தம்மைநிகர் மறையெலா மின்னுமள விட்டின்ற
சங்கர னநாதியாதி
சாமகீ தப்பிரியன் மணிகண்ட சீகண்ட
சசிகண்ட சாமகண்ட
சயசய வெனுந்தொண்ட ரிதயமலர் மேவிய
சடாமகுடன் மதனதகனன்
சந்திரசே கரனிடப வாகனன் கங்கா
தரன் சூலபாணி யிறைவன்
தனிமுத லுமாபதி புராந்தகன் பசுபதி
சயம்புமா தேவ னமலன்
தாண்டவன் றலைமாலை பூண்டவன் றெழுமன்பர்
தங்களுக் கருளாண்டவன்
தன்னிகரில் சித்தெலாம் வல்லவன் வடதிசைச்
சைலமெனு மொருவில்லவன்
தக்ஷிணா மூர்த்தியருண் மூர்த்திபுண் ணியமூர்த்தி
தருமட்ட மூர்த்தியானோன்
தலைமைபெறு கணநாய கன்குழக னழகன்மெய்ச்
சாமிநந் தேவதேவன்
சம்புவே தண்டன் பிறப்பிலான் முடிவிலான்
றாறுமுக் கண்க ளுடையான்
சதுரன் கடாசல வுரிப்போர்வை யான்செந்
தழற்கரத் தேந்தி நின்றோன்
சர்வகா ரணன்விறற் காலகா லன்சர்வ
சம்பிரமன் சர்வேச்சுரன்
தகைகொள்பர மேச்சுரன் சிவபிரா னெம்பிரான்
றம்பிரான் செம்பொற் பதம்
தகவுபெறு நிட்பேத நிட்கம்ப மாம்பரா
சத்திவடி வாம் பொற்பதம்

தக்கநிட்காடின்ய சம்வேத நாங்களிற்
சத்திவடி வாம்பொற்பதம்
சாற்றரிய விச்சைஞா னங்கிரியை யென்னுமுச்
சத்திவடி வாம்பொற்பதம்
தடையிலா நிர்விடய சிற்குண சிவானந்த
சத்திவடி வாம் பொற்பதம்
தகுவிந்தை மோகினியை மாயையசை விக்குமொரு
சத்திவடி வாம்பொற்பதம்
தாழ்விலீ சானமுதன் மூர்த்திவரை யைஞ்சத்தி
தஞ்சத்தியாம் பொற்பதம்
சவிகற்ப நிருவிகற் பம்பெறு மனந்தமா
சத்திசத் தாம்பொற்பதம்
தடநிருப வவிவர்த்த சாமர்த்திய திருவருட்
சத்துருவாம்பொற்பதம்
தவாதசாந் தப்பதந் துவாத்சாந் தப்பதந்
தருமிணை மலர்ப்பூம்பதம்
சகலர்விஞ் ஞானகலர் பிரளயா கலரிதய
சாக்ஷியா கியபூம்பதம்
தணிவிலா வனுபக்ஷ சம்புப க்ஷங்களிற்
சமரச முறும்பூம்பதம்
தருபாஞ் சூக்குமந் தூலமிவை நிலவிய
தமக்குளாய் ராம்பூம்பதம்
சரவசர வபரிமித விவிதவான் மப்பகுதி
தாங்குந் திருப்பூம்பதம்
தண்டபிண் டாண்டவகி லாண்ட பிர மாண்டந்
தடிக்கவரு ளும்பூம் பதம்
தத்வதாத் விகசகசி ருட்டிதிதி சங்கார
சகலகர்த் துருபூம்பதம்

சகசமல விருளகல நின்மலசு யம்பிரகா
 சங்குலவு நற்பூம்பதம்
மரபுறு மதாதீத வெளிநடுவி லானந்த
 மாநடன மிடுபூம்பதம்
மன்னும்வினை யொப்புமல பரிபாகம் வாய்க்கமா
 மாயையை மிதிக்கும்பதம்
மலிபிறவி மறவியி னழுந்துமுயிர் தமையருளின்
 மருவுற வெடுக்கும்பதம்
வளருநர்த்த விரதாண் டவமுதற் பஞ்சக
 மகிழ்ந்திட வியற்றும்பதம்
வல்லவுய லகன்மீதி லூன்றிய திருப்பதம்
 வளந்தரந் தூக்கும்பதம்
வல்வினையெ லாந்தவிர்த் தழியாத சுத்தநிலை
 வாய்த்திட வழங்கும்பதம்
மறைதுதிக் கும்பத மறைச்சிலம் பொளிர்பத
 மறைப்பாது கைச்செம்பதம்
மறைமுடி மணிப்பத மறைக்குமெட் டாப்பத
 மறைப்பரி யுகைக்கும்பதம்
மறையவ னுளங்கொண்ட பதமமித கோடியா
 மறையவர் சிரஞ்சூழ்பதம்
மறையவன்சிரசிகாமணியெ னும்பதமலர்கொண்
 மறையவன் வாழ்த்தும்பதம்
மறையவன் செயவுலக மாக்கின்ற வதிகார
 வாழ்வையீந் தருளும்பதம்
மறையவன் கனவினுங் காணாத பதமந்த
 மறையவன் பரவும்பதம்
மால்விடை யிவர்ந்திடு மலர்ப்பதந் தெய்வநெடு
 மாலருச் சிக்கும்பதம்

மால்பரவி நாடோறும் வணங்குபதம் மிக்கதிரு
மால்விழியி லங்கும்பதம்
மாறேட நின்றபத மோரனந் தங்கோடி
மாற்றலை யலங்கற்பதம்
மான்முடிப் பதநெடிய மாலுளப் பதமந்த
மாலுமறி வரிதாம்பதம்
மால்கொளவ தாரங்கள் பத்தினும் வழிபட்டு
வாய்மைபெற நிற்கும்பதம்
மாலுலகு காக்கின்ற வண்மைபெற் றடிமையின்
வதிந்திட வளிக்கும்பதம்
வரையுறு முருத்திரர்கள் புகழ்பதம் பலகோடி
வயவுருத் திரர்சூழ்பதம்
வாய்ந்திடுமுருத்திரற்கியல்கொண்முத்தொழில்செய்யும்
வண்மைதந் தருளும்பதம்
வானவிந் திராதி யெண்டிசைக் காவலர்கண்
மாதவத் திறனும்பதம்
மதியிரவி யாதிசுர ரசுரரந் தரர்வான
வாசிகள் வழுத்தும்பதம்
மணியுரகர் கருடர்காந் தருவர்விஞ் சையர்சித்தர்
மாமுனிவ ரேத்தும்பதம்
மாநிருதர் பைசாசர் கிம்புருடர் யக்ஷர்கள்
மதித்துவர மேற்கும்பதம்
மன்னுகின் னரர்பூதர் வித்தியா தரர்போகர்
மற்றையர்கள் பற்றும்பதம்
வண்மைபெறு நந்திமுதல் சிவகணத் தலைவர்கண்
மனக்கோயில் வாழும்பதம்
மாதேவி யெங்கண்மலை மங்கையென் னம்மைமென்
மலர்க்கையால் வருடும்பதம்

மறலியை யுதைத்தருள் கழற்பத மரக்கனை
மலைக்கீ ழடர்க்கும்பதம்
வஞ்சமறு நெஞ்சினிடை யெஞ்சலற விஞ்சுதிறன்
மஞ்சுற விளங்கும்பதம்
வந்தனைசெய் புந்தியவர் தந்துயர்த விர்ந்திடவுண்
மந்தணாக விற்றும்பதம்
மாறிலொரு மாறனுள மீறின்மகிழ் வீறியிட
மாறிநட மாடும்பதம்
மறக்கருணை யுந்தனி யறக்கருணை யுந்தந்து
வாழ்விக்கு மொண்மைப்பதம்
இரவுறும் பகலடிய ரிருமருங் கினுமுறுவ
ரெனவயங் கியசீர்ப்பதம்
எம்பந்த மறவெமது சம்பந்த வள்ளன்மொழி
யியன்மண மணக்கும்பதம்
ஈவரச ரெம்முடைய நாவரசர் சொற்பதிக
விசைபரிம ளிக்கும் பதம்
ஏவலார் புகழெமது நாவலா ரூரர்புக
விசைதிருப் பாட்டுப்பதம்
ஏதலூர் தங்காத வாதவூ ரெங்கோவி
னின்சொன்மணி யணியும் பதம்
எல்லூரு மணிமாட நல்லூரி னப்பர்முடி
யிடைவைகி யருண்மென்பதம்
எடுமேலெ னத்தொண்டர் முடிமேன் மறுத்திடவு
மிடைவலித் தேறும்பதம்
எழில்பரவை யிசையவா ரூர்மறுகி னருள்கொண்டி
ராமுழுது முலவும் பதம்
இன்றொண்டர் பசியறக் கச்சூரின் மனைதொறு
மிரக்கநடை கொள்ளும் பதம்

இளைப்புற வறிந்தன்பர் பொதிசோ றருந்தமு
னிருந்துபி னடக்கும் பதம்
எரிவிறகு விற்கவளர் கூடற் றெருத்தொறு
மியங்கிய விரக்கப்பதம்
இறுவைகை யங்கரையின் மண்படப் பல்கா
லெழுந்துவிளை யாடும்பதம்
எங்கேமெய் யன்பருள ரங்கே நலந்தர
வெழுந்தருளும் வண்மைப்பதம்
எவ்வண்ணம் வேண்டுகினு மவ்வண்ண மன்றே
யிரங்கியீந் தருளும்பதம்
என்போன்ற வர்க்குமிகு பொன்போன்ற கருணைதந்
திதயத்தி ருக்கும் பதம்
என்னுயிரை யன்னபத மென்னுயிர்க் குயிரா
யிலங்குசெம் பதுமப்பதம்
என்னறிவெ னும்பதமெ னறிவினுக் கறிவா
யிருந்தசெங் கமலப் பதம்
என்னன்பெ னும்பதமெ னன்பிற்கு வித்தா
யிசைந்தகோ கனகப்பதம்
என்றவ மெனும்பதமென் மெய்த்தவப் பயனா
யினைந்தசெஞ் சலசப்பதம்
என்னிருகண் மணியான பதமென்கண் மணிகளுக்
கினியநல் விருந்தாம் பதம்
என்செல்வ மாம்பதமென் மெய்ச்செல்வ வருவா
யெனுந்தாம ரைப்பொற்பதம்
என்பெரிய வாழ்வான பதமென்க ளிப்பா
மிரும்பதமெ னிதியாம்பதம்
என்றந்தை தாயெனு மிணைப்பதமெ னுறவா
மியற்பதமெ னட்பாம்பதம்

என்குருவெ னும்பதமெ னிட்டதெய் வப்பத
மெனதுகுல தெய்வப்பதம்
என்பொறிக ளுக்கெலா நல்விடய மாம்பதமெ
னெழுமையும் விடாப்பொற்பதம்
என்குறை யெலாந்தவிர்த் தாட்கொண்ட பதமெனக்
கெய்ப்பினில் வைப் பாகும்பதம்
எல்லார்க்கு நல்லபத மெல்லாஞ்செய் வல்லபத
மிணையிலாத் துணையாம்பதம்
எழுமன முடைந்துடைந் துருகிநெகிழ் பத்தர்கட்
கின்னமுத மாகும்பதம்
எண்ணுறிற் பாலினறு நெய்யொடு சருக்கரை
யிசைந்தென வினிக்கும்பதம்
ஏற்றமுக் கனிபாகு கன்னல்கற் கண்டுதே
னென்னமது ரிக்கும்பதம்
எங்கள்பத மெங்கள்பத மென்றுசம யத்தேவ
ரிசைவழக் கிடுநற்பதம்
ஈறிலாப்பதமெலாந் தருதிருப் பதமழிவி
லின்புதவு கின்ற பதமே.

திருச்சிற்றம்பலம்.

திருவடிப்புகழ்ச்சி முற்றிற்று.

சிவநேச வெண்பா.

காப்பு

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலஞ்
சொன்னவனே தூய்மெய்ச் சுகத்தவனே-மன்னவனே
சிற்பரனே யைங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்றாள் சரண். (௧)

வீறுடையாய் வேலுடையாய் வெற்புடையாய் விண்ணுடையாய்
நீறுடையாய் நேயர்கடந் நெஞ்சுடையாய்-கூறு
முதல்வாவோ ராறு முகவாமுக் கண்ணன்
புதல்வாநின் றாளெம் புகல். (௨)

திருச்சிற்றம்பலம்

பூதமெங்கே மற்றைப் புலனெங்கே பல்லுயிரின்
பேதமெங்கே யண்டமெனும் பேரெங்கே-நாதமெங்கே
மன்வடிவ மெங்கே மறையெங்கே வான்பொருணீ
பொன்வடிவங் கொள்ளாத போது. (௩)

மண்ணாசை வெற்பே மறிகடலே பொன்னாசை
பெண்ணாசை யொன்றேயென் பேராசை-நண்ணாசை
விட்டார் புகழும் விடையாய்நான் பொய்யாசைப்
பட்டால் வருமே பதம். (௪)

தந்தையா யென்னுடைய தாயாய்த் தகைசான்ற
சிந்தையா யென்னருமைத் தேசிகனாய்-முந்தையாய்
நீடுமறை முதலாய் நின்றாயென் னேநெஞ்சம்
வாடுமெனை யாட்கொள்ளா வாறு. (௫)

உன்னு லெனக்காவ துண்டதுநீ கண்டதுவே
யென்னு லுனக்காவ தேதுளது-சொன்னல்யான்
றந்தார்வத் தோடுந்த லைமேற்கொண் டுய்கிற்பே
னெந்தாயிங் கொன்றுமறி யேன். (சா)

உப்பிருந்த வோடோ வொதியோ வுலாப்பிணமோ
வெப்பிருந்த காடோ வினைச்சுமையோ-செப்பறியேன்
கண்ணப்ப ருக்குக் கனியனையாய் நிற்பணியா
துண்ணப் பருக்கு முடம்பு. (எ)

ஏலார் மனைதொறும்போ யேற்றெலும்புந் தேயநெடுங்
காலாய்த்திரிந்துழலுங் கால்கண்டாய்-மாலாகித்
தொண்டே வலஞ்செய்கழற் றோன்றலே நின்கோயிற்
கண்டே வலஞ்செய்யாக் கால். (அ)

மசும் பிறர்மனையி லேங்கவவ ரீயுமரைக்
காசும் பெறவிரிக்குங் கைகண்டாய்-மாசுந்த
விண்டுஞ் சிரங்குனிக்கும் வித்தகனே நின்றலத்தைக்
கண்டுஞ் சிரங்குவியாக் கை. (கூ)

வெங்கோடை யாதபத்தின் வீழ்நீர் வறந்துலர்ந்து
மங்கோடை யாதல் வழக்கன்றோ-வெங்கோநின்
சீர்சிந்தாச் சேவடியின் சீர்கேட்டு மானந்த
நீர்சிந்தா வன்கண் ணிலே. (கo)

வாயன்றேல் வெம்மலஞ்செல் வாயன்றேன் மாநரக
வாயன்றேல் வல்வெறி நாய்வாயென்பாங்-தாயென்றே
ஆழ்த்தாரா வேத்து முடையாய் சிவவென்றே
வாழ்த்தாதார் நாற்றப்பாழ் வாய். (கக)

வீட்டா ரிறைநீ விடைமேல் வரும்பவனி
காட்டா தடைத்த கதவன்றோ-நாட்டாதி
நல்லத் துளையா நதிச்சடையா யென்னுஞ்சீர்ச்
செல்லத் துளையாச் செவி. (கஉ)

புல்லங்கணநீர்ப் புழையென்கோ புற்றென்கோ
சொல்லும் பசுமட் டுளையென்கோ-சொல்லுஞ்சீர்
வீயாத பிஞ்ஞகப்பேர் மெல்லினத்தி னல்லிசைதான்
றோயாத நாசித் துளை. (கங)

தோற்றமிலாக்கண்ணுஞ் சுவையுணரா நாவுநிகழ்
நாற்ற மறியாத நாசியுமோர்-மாற்றமுந்தான்
கேளாச் செவியுங்கொள் கீழ்முகமே நீற்றணிதான்
மூளாது பாழ்த்த முகம். (கச)

மான்று முலக வழக்கின்படிமதித்து
மூன்று வகிர்ந்தே முடைநாற - வூன்று
மலக்கூடை யேற்றுகினு மாணுதேதென்பாற்
றலக்கூடற் றுழாத் தலை. (கரு)

கல்லென்கோ நீரடைக்குங் கல்லென்கோ கான்கொள்கருங்
கல்லென்கோ காழ்வயிரக் கல்லென்கோ-சொல்லென்கோ
வின்று வெளிலோ வெடுத்தாளெம் மீன்றுணோர்
நின்று ணினையாத நெஞ்சு. (கசா)

சொல்லுகின்ற வுள்ளுயிரை சோர்வுற் றிடக்குளிர்ந்து
கொல்லுகின்ற நஞ்சிற் கொடிதன்றோ-வொல்லுமன்றத்
தெம்மானின் றுட்கமல மெண்ணாது பாழ்வயிற்றிற்
சும்மா வடைக்கின்ற சோறு. (கஎ)

கற்றறியே னின்னடிச்சீர் கற்றோர் கழகத்தி
லுற்றறியே னுண்மை யுணர்ந்தறியேன்-சிற்றறிவேன்
வன்செய்வே னேர்விழியார் மையலினேன் மாதேவா
வென்செய்வே னின்னருளின் றேல். (௧௮)

தாரம்விற் றாருஞ் சேய்விற்றுந் தன்னைவிற்றும் பொய்யாத
வாரம்வைத் தான் முன்னிங்கோர் மன்னனென்பர்-நாரம்வைத்த
வேணிப் பிரானதுதான் மெய்யாமே லன்றெனை நீ
யேணிற் பிறப்பித்த தில். (௧௯)

வெள்ளைப் பிறையணிந்த வேணிப் பிரானேநான்
பிள்ளைப் பிராயத்திற் பெற்றோளை-யெள்ளப்
பொறுத்தாளத் தாயிற் பொறுப்புடையோய் நீதான்
வெறுத்தா லினியென்செய் வேன். (௨௦)

ஆயிரமன் றேநூறு மன்றேயீ ரைந்தன்றே
ஆயிரம்பே ரெந்தையெழுத் தைந்தேகாண்-நீயிரவு
மெல்லு நினைத்தியென வேத்துகினு மெந்தாய்வீண்
செல்லுமன மென்செய்கேன் செப்பு (௨௧)

எவ்வேளை யோவருங்கூற் றெம்பாலென் றெண்ணுகின்ற
வவ்வேளை தோறு மழுங்குற்றேன்—செவ்வேளை
மிக்களித்தோய் நின்கழற்கால் வீரத்தை யெண்ணுதொறு
மெக்களித்து வாழ்கின்றேன் யான். (௨௨)

எந்தாயென் குற்றமெலா மெண்ணுங்கா லுண்ணடுங்கி
நொந்தா குலத்தி னுழைகின்றேன்-சிந்தாத
கான மகிழ்நின் களக்கருணை யெண்ணுதொறு
மீனமகிழ் கின்றேன் விரைந்து. (௨௩)

கண்ணப்ப னேத்துநுதற் கண்ணப்ப மெய்ஞ்ஞான
விண்ணப்ப நின்றனக்கோர் விண்ணப்ப-மண்ணிற்சில
வானவரைப் போற்று மதத்தோர் பலருண்டு
நானவரைச் சேராம னாட்டு. (௨௪)

பொன்னின் றொளிரும் புரிசடையோய் நின்னையன்றிப்
பின்னொன் றறியேன் பிழைநோக்கி-யென்னை
யடித்தாலு நீயே யணைத்தாலு நீயே
பிடித்தேனுன் பொற்பாதப் பேறு. (௨௫)

இப்பாரி லென்பிழைக ளெல்லாம் பொறுத்தருளென்
னப்பாநின் றாட்கே யடைக்கலங்கா-ணிப்பாரி
னானினது தாணீழ லண்ணுமட்டு நின்னடியர்
பானினது சீர்கேட்கப் பண். (௨௬)

திருச்சிற்றம்பலம்.

சிவநேச வெண்பா

முற்றிற்று.

மஹாதேவமாலை.

——(o)——

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கருணைநிறைந் தகம்புறமுந் துளும்பிவழிந்
துயிர்க்கெல்லாங் களைக ணாகித்
தெருணிறைந்த வின்பநிலை வளர்க்கின்ற
கண்ணுடையோய் சிதையா ஞானப்
பொருணிறைந்த மறைபமுதம் பொழிகின்ற
மலர்வாயோய் பொய்ய னேன்றன்
மருணிறைந்த மனக்கருங்கற் பாறையுமுட்
கசிந்துருக்கும் வடிவத் தோயே.

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

உலகநிலை முழுதாகி யாங்காங் குள்ள
வுயிராகி யுயிர்க்குயிரா மொளிதா னாகிக்
கலகநிலை யறியாத காட்சி யாகிக்
கதியாகி மெய்ஞ்ஞானக் கண்ணதாகி
யிலகுசிதா காசமதாய்ப் பரமா காச
வியல்பாகி யிணையொன்று மில்லா தாகி
யலகிலறி வானந்த மாகிச் சச்சி
தானந்த மயமாகி யமர்ந்த தேவே. (௧)

உலகமெலாந் தனிநிறைந்த வுண்மையாகி
 யோகியர்தம் மனுபவத்தி னுவப்பாயென்றுங்
கலகமுறா வுபசாந்த நிலையதாகிக்
 களங்கமற்ற வருண்ஞானக் காட்சியாகி
விலகலுறா நிபிடவா னந்தமாகி
 மீதானத் தொளிர்கின்ற விளக்கமாகி
யிலகுபரா பரமாய்ச்சிற் பரமாயன்ப
 ரிதயமலர் மீதிருந்த வின்பத்தேவே. (உ)

வித்தாகி முளையாகி விளைவதாகி
 விளைவிக்கும் பொருளாகி மேலுமாகிக்
கொத்தாகிப் பயனாகிக் கொள்வோனாகிக்
 குறைவாகி நிறைவாகிக் குறைவிலாத
சத்தாகிச் சித்தாகி யின்பமாகிச்
 சதாநிலையா யெவ்வுயிர்க்குஞ் சாட்சியாகி
முத்தாகி மாணிக்க மாகித்தெய்வ
 முழுவயிரத் தனிமணியாய் முளைத்ததேவே. (ங)

வேதாந்த நிலையாகிச் சித்தாந்தத்தின்
 மெய்யாகிச் சமரசத்தின் விவேகமாகி
நாதாந்த வெளியாகி முத்தாந்தத்தி
 னடுவாகி நவநிலைக்கு நண்ணுதாகி
மூதாண்ட கோடியெல்லாந் தாங்கிநின்ற
 முதலாகி மனாதீத முத்தியாகி
வாதாண்ட சமயநெறிக் கமையாதென்று
 மௌனவியோ மத்தினிடை வயங்குந்தேவே. (ச)

அளவிறந்த நெடுங்காலஞ் சித்தர்யோக
 ரதிநிர்மல ரயன்முதலோ ரனந்தவேதங்

களவிறந்துங் கரணாதி யிறந்துஞ்செய்யுங்
கடுந்தவத்துங் காண்பரிதாங் கடவுளாகி
யுளவிறந்த வெம்போல்வா ருள்ளத்துள்ளே
யூறுகின்ற தெள்ளமுத வூறலாகிப்
பிளவிறந்து பிண்டாண்ட முழுதுந்தானாய்
பிறங்குகின்ற பெருங்கருணைப் பெரியதேவே. (ரு)

வாயாகி வாயிறந்த மௌனமாகி
மதமாகி மதங்கடந்த வாய்மையாகிக்
காயாகிப் பழமாகித் தருவாய்மற்றைக்
கருவிகர ணாதிகளின் கலப்பாய்ப்பெற்ற
தாயாகித் தந்தையாய்ப் பிள்ளையாகித்
தானாகி நானாகிச் சகலமாகி
யோயாத சத்தியெலா முடையதாகி
யொன்றாகிப் பலவாகி யோங்குந்தேவே. (சு)

பொன்னாகி மணியாகிப் போகமாகிப்
புறமாகி யகமாகிப் புனிதமாகி
மண்ணாகி மலையாகிக் கடலுமாகி
மதியாகி ரவியாகி மற்றுமாகி
முன்னாகிப் பின்னாகி நடுவுமாகி
முழுதாகி நாதமுற முழங்கியெங்கு
மின்னாகிப் பரவியின்ப வெள்ளந்தேக்க [தேவே
வியன்கருணைப் பொழிமுகிலாய் விளங்குந்

அரிதாகி யரியதினு மரியதாகி
யநாதியா யாதியா யருளதாகிப்
பெரிதாகிப் பெரியதினும் பெரியதாகிப்
பேதமா யபேதமாய்ப் பிறங்காநின்ற

கரிதாகி வெளிதாகிக் கலைகளாகிக்
 கலைகடந்த பொருளாகிக் காணுதீதத்
தெரிதான வெளிநடுவி லருளாம்வண்மைச்
 செழுங்கிரணச் சுடராகித் திகழுந்தேவே. (அ)

உருவாகி யுருவினிலுள் ளுருவமாகி
 யுருவத்தி லுருவாகி யுருவுள்ளொன்று
யருவாகி யருவினிலுள் ளருவமாகி
 யருவத்தி லருவாகி யருவுள்ளொன்றாய்க்
குருவாகிச் சத்துவசிற் குணத்ததாகிக்
 குணாகிதப் பொருளாகிக் குலவாநின்ற
மருவாகி மலராகி வல்லியாகி
 மகத்துவமாயணுத்துவமாய் வயங்குந்தேவே. (கூ)

மாணுகி மோகினியாய் விந்துவாகி
 மற்றவையாற் காணுத வானமாகி
நாணுகி நானல்ல ணுகிநானே
 நாணுகும் பதமாகி நான்றான்கண்ட
தாணுகித் தானல்ல ணுகித்தானே
 தாணுகும் பதமாகிச் சகசஞான
வாணுகி வானடுவில் வயங்குகின்ற
 மௌனநிலை யர்கியெங்கும் வளருந்தேவே (க0)

மந்திரமாய்ப் பதமாகி வன்னமாகி
 வளர்கலையாய்த் தத்துவமாய்ப் புவனமாகிச்
சந்திரனு யிந்திரனு யிரவியாகித்
 தானவராய் வானவராய்த் தயங்காநின்ற
தந்திரமா யிவையொன்று மல்லவாகித்
 தானுகித் தனதாகித் தானுன்காட்டா

வந்தரமா யப்பாலா யதற்கப்பாலா
யப்பாலுக் கப்பாலா யமர்ந்ததேவே. (கக)

மலைமேலுங் கடன்மேலு மலரின்மேலும்
வாழ்கின்ற மூவுருவின் வயங்குங்கோவே
நிலைமேலு நெறிமேலு நிறுத்துகின்ற
நெடுந்தவத்தோர் நிறைமேலு நிகழ்த்தும்வேதக்
கலைமேலு மெம்போல்வா ருளத்தின்மேலுங்
கண்மேலுந் தோண்மேலுங் கருத்தின்மேலுந்
தலைமேலு முயிர்மேலு முணர்வின்மேலுந்
தருமன்பின் மேலும்வளர் தாண்மெய்த்தேவே.

பொற்குன்றே யகம்புறமும் பொலிந்துநின்ற
பூரணமே யாரணத்துட் பொருளேயென்றுங்
கற்கின்றோர்க் கினியசுவைக் கரும்பேதான
கற்பகமே கற்பகத்தின் கனியேவாய்மைச்
சொற்குன்று நாவகத்துண் மாறுமின்பந்
தோற்றுகின்ற திருவருட்சீர்ச் சோதியேவிண்
ணிற்கின்ற சுடரேயச் சுடருள்ளோங்கு
நீளொளியே யவ்வொளிக்கு ணிறைந்ததேவே.

கோவேயென் குணக்குன்றே குன்றுஞானக்
கொழுந்தேனே செழும்பாகே குளிர்ந்தமோனக்
காவேமெய் யறிவின்ப மயமேயென்றன்
கண்ணேமுக் கண்கொண்ட கரும்பேவானத்
தேவேயத் தேவுக்குந் தெளிய வொண்ணாத்
தெய்வமே வாடாமற் றிகழ்சிற்போதப்
பூவேயப் பூவிலுறு மணமேயெங்கும்
பூரணமாய் நிறைந்தருளும் புனிதத்தேவே. (கச)

வானேயவ் வானுலவுங் காற்றேகாற்றின்
வருநெருப்பே நெருப்புறுநீர் வடிவேநீரிற்
றானேயும் புவியேயப் புவியிற்றங்குந்
தாபரமே சங்கமமே சாற்றுகின்ற
வூனேநல் லுயிரேயுள் ளொளியேயுள்ளத்
துணர்வேயவ் வுணர்வுகலந் தூறுகின்ற
தேனேமுக் கனியேசெங் கரும்பேபாகின்
றீஞ்சுவையே சுவையனைத்துந் திரண்டதேவே. (கரு)

விண்ணேவிண் ணுருவேவிண் முதலேவிண்ணுள்
வெளியேயவ் வெளிவிளங்கு வெளியேயென்றன்
கண்ணேகண் மணியேகண் ணொளியேகண்ணுட்
கலந்துநின்ற கதிரேயக் கதிரின்வித்தே
தண்ணேதண் மதியேயம் மதியிற்பூத்த
தண்ணமுதே தண்ணமுத சாரமேசொற்
பண்ணேபண் ணிசையேபண் மயமேபண்ணின்
பயனேமெய்த் தவர்வாழ்த்திப் பரவுந்தேவே. ()

தத்துவமே தத்துவா தீதமேசிற்
சயம்புவே யெங்குநிறை சாக்ஷியேமெய்ச்
சத்துவமே சத்துவத்தின் பயனேயின்பந்
தந்தருளும் பெருவாழ்வாஞ் சாமியேயெஞ்
சித்தநிலை தெளிவிக்கு மொளியேசற்றுந்
தெவிட்டாத தெள்ளமுதே தேனேயென்றுஞ்
சுத்தநெறி திறம்பாதா ரறிவிற்றோய்ந்த
சுகப்பொருளே மெய்ஞ்ஞானந் துலங்குந்தேவே.

யோகமே யோகத்தின் பயனேயோகத்
தொருமுதலே யோகத்தி னோங்குந்தூய

போகமே போகத்தின் பொலிவேபோகம்
புரிந்தருளும் புண்ணியமே புனிதஞான
யாகமே யாகத்தின் விளைவேயாகத்
திறையேயவ் விறைபுரியு மின்பேயன்பர்
மோகமே மோகமெலா மழித்துவீறு
மோனமே மோனத்தின் முளைத்ததேவே. (௧௮)

மறைமுடிக்குப் பொருத்தமுறு மணியேஞான
வாரிதியே யன்பர்கடம் மனத்தே நின்ற
குறைமுடிக்குங் குணக்குன்றே குன்றுமோனக்
கோமளமே தூயசிவக் கொழுந்தேவெள்ளைப்
பிறைமுடிக்கும் பெருமானே துளவமாலைப்
பெம்மானே செங்கமலப் பிரானேயிந்த
விறைமுடிக்கும் மூவர்கட்கு மேலாய்நின்ற
விறையேயிவ் வுருவுமின்றி யிருந்ததேவே. (௧௯)

கோதகன்ற யோகர்மனக் குகையில்வாழுங்
குருவேசண் முகங்கொண்ட கோவேவஞ்ச
வாதகன்ற ஞானியர்தம் மதியிலூறும்
வானமுதே யானந்த மழையேமாயை
வேதகன்ற முத்தர்களை விழுங்குஞான
வேழமே மெய்யின்ப விருந்தேநெஞ்சிற்
றீதகன்ற மெய்யடியர் தமக்குவாய்த்த
செல்வமே யெல்லையிலாச் சீர்மைத்தேவே. (௨0)

வன்புகலந் தறியாத மனத்தோர்தங்கண்
மனங்கலந்து மதிகலந்து வயங்காநின்ற
வென்புகலந் தான்கலந்து புலன்களோடு
மிந்திரிய மவைகலந்துள் ளியங்குகின்ற

வன்புகலந் தறிவுகலந் துயிரைம்பூத
மான்மாவுங் கலந்துகலந் தணித்தூறி
யின்புகலந் தருள்கலந்து துளும்பிப்பொங்கி
யெழுங்கருணைப் பெருக்காறே யின்பத்தேவே.

தண்ணமுத மதிகுளிர்ந்த கிரணம்வீச
தடம்பொழிற்பூ மணம்வீசத் தென்றல்வீச
வெண்ணமுதப் பளிக்குநிலா முற்றத்தேயின்
னிசைவீசத் தண்பனிநீ ரெடுத்துவீசப்
பெண்ணமுத மனையவர்வின் ணமுதமூட்டப்
பெறுகின்ற சுகமனைத்தும் பிற்பட்டோடக்
கண்ணமுதத் துடம்புயிர்மற் றனைத்துமின்பங்
கலந்துகொளத் தருங்கருணைக் கடவுட்டேவே.

சுழியாத வருட்கருணைப் பெருக்கேயென்றுந்
தூண்டாத மணிவிளக்கின் சோதியேவா
னொழியாது கதிர்ப்பரப்புஞ் சுடரேயன்பர்க்
கோவாத வின்பருளு மொன்றேவின்றோர்
விழியாலு மொழியாலு மனத்தினாலும்
விழைதருமெய்த் தவத்தாலும் விளம்புமெந்த
வழியாலுங் கண்டுகொளற் கரிதாய்ச்சுத்த
மௌனவெளி யூடிருந்து வயங்குந்தேவே. (௨௯)

சொல்லொழியப் பொருளொழியக் கரணமெல்லாஞ்
சோர்ந்தொழிய வுணர்வொழியத் துளங்காநின்ற
வல்லொழியப் பகலொழிய நடுவேநின்ற
வானந்த வநுபவமே யதீதவாழ்வே
நெல்லொழியப் பதர்கொள்வார் போலவின்ப [நெஞ்சக்
கிறைவொழியக் குறைகொண்மத நெறியோர்

கல்லொழிய மெய்யடிய ரிதயமெல்லாங்
கலந்துகலந் தினிக்கின்ற கருணைத்தேவே. (உ௬)

அலைகடலும் புவிவரையு மனல்காலீரு
மந்தரமு மற்றையகி லாண்டம்யாவு
நிலைகுலையா வண்ணமருள் வெளியினூடு
நிரைநிரையா நிறுத்தியுயிர் நிகழும்வண்ணந்
தலைகுலையாத் தத்துவஞ்செய் திரோதையென்னுந்
தனியாணை நடத்தியருட் டலத்திலென்று
மலைவறவீற் றிருந்தருளு மரசே முத்தி [தேவே.
வழித்துணையே விழித்துணையுண் மணியாந்

வரம்பழுத்த நெறியேமெய்ந் நெறியிலின்ப
வளம்பழுத்த பெருவாழ்வே வானோர்தங்கள்
சிரம்பழுத்த பதப்பொருளே யறிவானந்த
சிவம்பழுத்த வநுபவமே சிதாகாசத்திற்
பரம்பழுத்த நடத்தரசே கருணையென்னும்
பழம்பழுத்த வான்றருவே பரம ஞானத்
திரம்பழுத்த யோகியர்தம் யோகத்துள்ளே
தினம்பழுத்துக் கனிந்தவருட் செல்வத்தேவே.

அண்டமெலாங் கண்ணாகக் கொளினுங்காண் டற்
கணுத்துணையுங் கூடாவென் றனந்தவேதம்
விண்டலறி யோலமிட்டுப் புலம்பமோன [றே
வெளிக்குள்வெளி யாய்நிறைந்து விளங்குமொன்
கண்டவடி வாயகண்ட மயமாயெங்குங்
கலந்துநின்ற பெருங்கருணைக் கடவுளேயெஞ்
சண்டவினைத் தொடக்கறச்சின் மயத்தைக்காட்டுஞ்
சற்குருவே சிவகுருவே சாந்தத்தேவே. (உஎ)

உடல்குளிர வுயிர்தழைக்க வுணர்ச்சியோங்க
வுளங்கனிய மெய்யன்ப ருள்ளத்தூடே
கடலனைய பேரின்பந் துளும்பநாளுங்
கருணைமலர்த் தேன்பொழியுங் கடவுட்காவே
விடலரிய வெம்போல்வா ரிதயந்தோறும்
வேதாந்த மருந்தளிக்கும் விருந்தேவேதந்
தொடலரிய வெளிமுழுதும் பரவிஞானச்
சோதிவிரித் தொளிர்கின்ற சோதித்தேவே.

பொங்குபல சமயமெனு நதிகளெல்லாம்
புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கியோங்குங்
கங்குகரை காணாத கடலேயெங்குங்
கண்ணாகக் காண்கின்ற கதியேயன்பர்
தங்கநிழல் பரப்பிமயற் சோடையெல்லாந்
தணிக்கின்ற தருவேபூந் தடமேஞானச்
செங்குமுத மலரவரு மதியேயெல்லாஞ்
செய்யவல்ல கடவுளே தேவதேவே. (உக)

வான்காணா மறைகாணா மலரோன்காணான்
மால்காணா னுருத்திரனு மதித்துக்காணா
னன்காணா விடத்ததனைக் காண்பேமென்று
நல்லோர்க ணவில்கின்ற நலமேவேட்கை
மான்காணா வுளக்கமல மலர்த்தாநின்ற
வான்சுடரே யானந்த மயமேயீன்ற
வான்காணா விளங்கன்று யலமந்தேங்கு
மன்பர்தமைக் கலந்துகொளு மமலத்தேவே. (௩௦)

மெய்ஞ்ஞான விருப்பத்தி லேறிக்கேள்வி
மீதேறித் தெளிந்திச்சை விடுதலேறி

யஞ்ஞான மற்றபடி யேறியுண்மை
யறிந்தபடி நிலையேறி யதுநானென்னுங்
கைஞ்ஞானங் கழன்றேறி மற்றவெல்லாங்
கடந்தேறி மௌனவியற் கதியிலேறி
யெஞ்ஞான மறத்தெளிந்தோர் கண்டுங்காணே
மென்கின்ற வநுபவமே யின்பத்தேவே. (௩௧)

பற்றறியா முத்தர்தமை யெல்லாம்வாழைப்
பழம்போல விழுங்குகின்ற பரமேமாசு
பெற்றறியாப் பெரும்பதமே பதத்தைக்காட்டும்
பெருமானே யானந்தப் பேற்றின்வாழ்வே
யுற்றறியா தின்னுமின்னு மறைகளெல்லா
மோலமிட்டுத் தேடுகின்ற வொன்றேயொன்றுங்
கற்றறியாப் பேதையேன் றனக்குமின்பங்
கனிந்தளித்த வருட்கடலே கருணைத்தேவே.

பேராய வண்டங்கள் பலவும்பிண்ட
பேதங்கள் பற்பலவும் பிண்டாண்டத்தின்
வாராய பலபொருளுங் கடலுமண்ணும்
மலையளவுங் கடலளவு மணலும்வானு
மூராத வான்மீனு மணுவுமற்றை
யுள்ளளவு மளந்திடலா மோகோவுன்னை
யாராலு மளப்பரிதென் றனந்தவேத
மறைந்திளைக்க வதிதூர மாகுந்தேவே. (௩௩)

கற்பங்கள் பலகோடி செல்லத்திய
கனலினடு வூசியின்மேற் காலையூன்றிப்
பொற்பறமெய் யுணவின்றி யுறக்கமின்றிப்
புலர்ந்தெலும்பு புலப்படவைம் பொறியையோம்பி

நிற்பவருக் கொளித்துமறைக் கொளித்தியோக [ஞ்
நீண்முனிவர்க்கொளித்தமரர்க் கொளித்துமேலா
சிற்பதத்திற் சின்மயமாய் நிறைந்துஞானத்
திருவாள ருட்கலந்த தேவதேவே. (௩௪)

மட்டகன்ற நெடுங்கால மனத்தால்வாக்கான்
மதித்திடினும் புலம்பிடினும் வாராதென்றே
கட்டகன்ற மெய்யறிவோர் கரணநீக்கிக்
கலையகற்றிக் கருவியெலாங் கழற்றிமாயை
விட்டகன்று கருமமல போதம்யாவும்
விடுத்தொழித்துச் சகசமல வீக்கநீக்கிச்
சுட்டகன்று நிற்கவவர் தம்மைமுற்றுஞ்
சூழ்ந்துகலந் திடுஞ்சிவமே துரியத்தேவே.(௩௫)

உருநான்கு மருநான்கு நடுவேநின்ற
வுருவருவ் மொன்றுமிவை யுடன்மேலுற்ற
வொருநான்கு மிவைகடந்த வொன்றுமாயவ்
வொன்றிநடு வாய்நடுவுள் ளொன்றாய் நின்றே
யிருநான்கு மமைந்தவரை நான்கினோடு
மெண்ணான்கின் மேலிருத்து மிறையேமாயைக்
கருநான்கும் பொருணான்குங் காட்டுமுக்கட்
கடவுளே கடவுளர்கள் கருதுந்தேவே (௩௬)

எழுத்தறிந்து தமையுணர்ந்த யோகருள்ளத்
தியலறிவாந் தருவினிலன் பெனுமோருச்சி
பழுத்தளிந்து மௌனநறுஞ் சுவைமேற்பொங்கிப்
பதம்பொருந்த வநுபவிக்கும் பழமேமாயைக்
கழுத்தரிந்து கருமமலத் தலையைவீசுங்
கடுந்தொழிலோர் தமக்கேநற் கருணைகாட்டி